DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous | Case No. C.C.83/2020

Preliminary Register | P.W. 1

Sessions

Deposition of Witness for: Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | : Monikandan |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2021.

**முதல் விசாரணை** -

நான் கரும்பாறையில் வசிக்கிறேன். பெயிண்டராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 27.10.2019 ம் தேதி பகல் 12.30 மணி அளவில் கரும்பாறை தேவி முத்தாரம்மன் கோவில் முன்பு கெசின் பைக்கை விட்டவிட்டு சைடில் ஒதுங்கி நின்றார். அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த ஜெகன் போகிறதற்கு வழி இல்லை ஒதுங்கி நிற்க்க மாட்டாயா என்ற ஜெசினைப் பார்த்து கேட்டார். இவ்வளவு இடம் கிடக்கு உங்களுக்கு போக

பாதை இல்லையா என்று ஜெகனை பார்த்து நான் கேட்டேன். அதற்கு ஜெகன் புண்டாமோனே ஊனக்கு என்ன வேலை இதுல குத்தி குடலை உருவி விடுவேன் என்று மிரட்டினார். எனக்கும் ஜெகனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஜெகன் உடனே தனது இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த சுமார் 1 1/2 அடி நீளமுள்ள கத்தியை எடுத்து எனது இடது பக்க தோளில் சரமாரியாக குத்தினார். எல்லோரும் வந்து பிடித்து மாத்தினார்கள். இண்ணைக்கு தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். நான் கீழே விழுந்துவிட்டேன். இருசக்கர வாகனத்தில் கெசின், அஜித் மற்றும் பிரதிஸ் என்னை தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைதது சென்றார்கள். அங்கு முதலுதவி செய்து மேல் சிகிட்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 9 நாட்கள் சிகிட்சையில் இருந்தேன். புகார் அளிக்க காவல்நிலையம் சென்றேன் அவர்கள் என்னை சிகிட்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். மறுநாள் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் அளித்தேன். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். தமிழில் எழுத படிக்கத் தெரியும். ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். அதிகமாக தமிழில் எழுதுவேன். இதற்கு முன்பு நீதிமன்றத்திற்கு வேறு எதற்கும் வரவில்லை. எனது வீடு குமாரபுரத்திலிருந்து பெருஞ்சிலம்பு செல்லும் திசையில் சாலையின் வலது புறம் முத்தாரம்மன் அருகே உள்ள கான்கீரீட் சாலையில் உள்ளது என்றால் சரிதான். கான்கிரீட் சாலையில் முதலில் முத்தாரம்மன் கோவிலும் அடுத்து எனது வீடும் உள்ளது. கோவில் சுற்று சுவர் உத்தேசமாக 100 அடி நீளம் இருக்கும். கோவில் காம்பவுண்டுக்கும் என் வீட்டுக்கும் இடையே சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. ரோட்டில் கோவில் முன்புதான் நடந்தது. கோவிலுக்கு வலது பக்கம் நடந்ததா அல்லது நேர் முன்னால் நடந்ததா என்றால் நேர் முன்னால் நடந்தது. எதிரி எந்த திசையில் வந்தார் என்றால் குமாரபுரத்தில் திசையில் இருந்து வந்தார். அவருடன் பின்னால் ஒருவர் அமர்ந்துவந்தார். எதிரியுடன் வந்தவர் ஒதுங்கி நின்றார். எதிரியுடன் ஒருவர் வந்தது குறித்து புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முத்தாரம்மன் கோவில் அருகில் உள்ள வீடு யாருடையது என்றால் ஜாண்சன் என்பவரது

அம்மாவின் வீடு. இடிந்த நிலையில் உள்ள ஓட்டு வீடு. அங்கு யாரும் குடியிருக்கவில்லை. எதிரி வரும்போது நான், கெசின், பிரதீஸ், அஜித், ஜெயம்ரபி, ஆகியோர் நின்றிருந்தோம். நாங்கள் அனைவரும் நண்பர்கள். எதிரி சரியாக எத்தனை மணிக்கு அங்கு வந்தார் என்றால் 12.30 மணிக்கு வந்தார். பிரதீஸ் என்பவர் வீடு பெருஞ்சிலம்பு செல்லும் சாலையில் அம்மன் கோவிலில்இருந்து இடது பக்கம் 3 வீடு தள்ளி உள்ளது. அஜித் வீடு கரும்பாறை தபால் நிலையம் அருகில் உள்ளது. சம்பவ இடத்தில் இருந்து 200 மீட்டர் தூரத்தில் உள்ளது. கெசின் வீடு சம்பவ இடத்தில் இருந்து 300, 400 மீட்டர் தள்ளி பேயோட்டில் உள்ளது. எனக்கு 5 சகோதரிகள் ஒரு சகோதரர். ஜெயா என்பவர் என் சகோதரி. அவர்கள் காவல்துறையில் வேலை செய்கிறார். அவருடைய கணவர் போக்குவரத்து காவலராக உள்ளார். சம்பவ சமயத்தில் அவர் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணிபுரிந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு காரில் செல்லவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையம் வரை இருசக்கர வாகனத்தில் வந்தேன். மிகவும் முடியாததால் குமாரபுரத்தில் இருந்து டாட்டா சுமோ வண்டி பிடித்து மருத்துவமனைக்கு வந்தேன். மருத்துவமனைக்கு செல்லும்போது என் நண்பர்கள் தவிர வேறு யாரும் உடன் வரவில்லை. கெசினுக்கும் எதிரிக்கும் வாக்குவாதம் நடக்கும்போது எதிரி பைக்கில் அமர்ந்திருந்தார் என்றால் சரியல்ல. முதலில் பைக்கில் அமர்ந்திருந்தார். பின்பு இறங்கி வந்தார். அந்த சமயத்தில் நான் சுமார் 6 அடி தள்ளி நின்றிருந்தேன். கத்தி சுமார் 2 இஞ்ச் அகலம் இருக்கும். கத்தியால் வெட்டினாரா அல்லது குத்தினாரா என்றால் குத்தினார். அவர் குத்தும்போது எனது நண்பர்கள் அங்குதான் நின்றிருந்தார்களா என்றால் ஆமாம். திடீரென்று குத்தினார். யாராவது தடுத்தார்களா என்றால் திடீரென்று குத்தியதால் என்னை அவர்கள் பிடித்தார்கள். எதிரியை பிடிக்க முயற்ச்சி செய்தார்களா என்றால் இல்லை. எதிரி கையில் கத்தி இருந்ததால் பயததில் யாரும் முயறச்சி செய்யவில்லை. சம்பவ சமயத்தில் பேன்ட் சட்டை அணிந்திருந்தேன். இரத்தம் நிறைய வந்தது. தரையில் பட்டது. சட்டை மற்றும் பேண்டில் இரத்த கறை படிந்தது. அதை போலீசிடம் கொடுக்கவில்லை. எனக்கும் நண்பர்கள் எல்லோருக்கும் இருசக்கர வாகனம் உண்டு. அனைத்து வாகனங்களும் அங்கு இருந்தது என்றால் சரியல்ல. இரண்டு இருசக்கர வாகனங்கள் இருந்தது. உத்தேசமாக வாக்குவாதம் மற்றும் சம்பவம் ஒரு 2 நிமிடங்களுக்குள் நடந்து முடிந்தது. சம்பவம் நடந்து சுமார் 5, 10 நிமிடங்களுக்குள் காவல்நிலையம் வந்தோம். அங்கிருந்துமருத்துவமனைக்கு உத்தேசமாக 20

நிமிடங்களில் வந்தோம். தக்கலை மருத்துவமனையில் காயத்தை பஞ்சால் அடைத்து உடனடியாக ஆம்புலன்ஸ் மூலமாக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனையில் என்னுடன் நண்பர்கள் இருந்தார்கள். தகவல் கிடைத்து என் மூத்த அக்கா பிரேமலதா மருத்துவமனைக்கு அன்றே வந்தார். எத்தனை முறை குத்தினார் என்று சரியாக தெரியவில்லை. உத்தேசமாக 4, 5 முறை குத்தினாரா என்றால் இருக்கும். சிலமுறை என்மேல் படவில்லை. ஒரு முறை நான் கையால் தடுத்துவிட்டேன். தோளில் சுமார் 2 முறை குத்தினார். இடது கை விரலில் சிறிதாக ஒரு காயம் ஏற்பட்டது. போலீஸ் என்னை சம்பவத்திற்கு மறுநாள் 28 ம் தேதி மதியம் சமயம் விசாரித்தார்கள். என்னிடம் கேட்டு நான் சொல்ல சொல்ல அவர்கள் எழுதினார்கள். அவர்கள் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை நகல் கொடுத்தார்களா என்றால் ஞாபகமில்லை. போலீசார் மருத்துமனை வருவதற்கு முன்பு சம்பவ இடத்தில் விசாரித்தார்களா என்றால் இல்லை. எதிரி குத்தி குடலை உருவிவிடுவேன் என்று சொன்னதாக புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரி என் வீட்டு பக்கத்தில் உள்ளார். அவருககும் எனக்கும் உள்ள முன் விரோதம் காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியின் வீடு என் வீட்டை தாண்டி 3 வது வீடு என்றால் சரிதான். நானும் எனது நண்பர்களும் அடிக்கடி மதுபானம் குடித்துவிட்டு எதிரியுடன் பிரச்சினை செய்வது உண்டு என்றால் சரியல்ல. வேறு சூழ்நிலையில் ஏற்பட்ட காயத்தை எதிரியை பழிவாங்க எதிரியால் ஏற்பட்டது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்துறையில் பணிபுரியும் எனது அக்கா மற்றும் அவரது கணவரை பயன்படுத்தி பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous Case No. C.C.83/2020

Preliminary Register P.W. 2

Sessions

| | |
|---|---|
| | Prosecution |
| Deposition of Witness for | Defence |
| | Court |

Name : Kesin

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2021.

**முதல் விசாரணை** -

நான் பெருஞ்சிலம்பில் வசிக்கிறேன். நான் மின்சாரவாரியத்தில் ஒப்பந்த முறையில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 27.10.2019 ம் தேதி தீபாவளி அன்று பகல் 12.30 மணி அளவில் நானும் பிரதீசும் கரும்பாறை தேவி முத்தாரம்மன் கோவில் அருகில் நின்றுகொண்டிருக்கும்போது எதிரி ஜெகன் பைக்கில் வந்தார். ஒதுங்கி நிக்க மாட்டீர்களா என்று என்னிடம் சண்டை போட்டார். நாங்கள் வழியில் நிற்கவில்லை. சைடில்தான் நின்றோம்.

அப்போது மணிகண்டன் அங்கு வந்து இவ்வளவு வழி இருக்கிறது போக முடியாதா என்று கேட்டார். மணிகண்டனுடன் எதிரி சண்டைபோட்டுவிட்டு புண்டாமோனே என்று கெட்டவார்த்தையால் திட்டினார். பைக் டேங் கவரில் இருந்து கத்தி எடுத்தார். கத்தியை வீசி மணிகண்டனின் இடது தோளில் குத்தினார். பிரதீஸ், அஜித், மற்றும் ஜெயராபி ஆகியோர் வந்த உடன் எதிரி போய்விட்டார். இன்றைக்கு தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். நானும் அஜித்தும் மணிகண்டனை இடையில் உட்கார வைத்து இருசக்கர வாகனத்தில் காவல்நிலையத்திற்கு சென்றோம். இரத்தம் வடிந்து கொண்டிருந்ததால் அவர்கள் மருத்துவமனைக்கு செல்லச் சொன்னார்கள். சுமோ பிடித்து தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். பஞ்சு வைத்து ஆம்புலன்சில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மணிகண்டனின் மூத்த அக்கா தக்கலை மருத்துவமனைக்கு வந்தார். அவர் மணிகடண்டனுடன் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்றார். இது குறித்து போலீசார் என்னிடம் விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

நான் பொறியியல் பட்டய படிப்பு முடித்துள்ளேன். தினமும் மின்சாரதுறையில் வேலைக்கு செல்வேன். களியல் ஆப்பீசில் வேலை. காலை 8.30 மணிக்கு நிற்க்க வேண்டும். மாலை 6.30, 7.00 மணிக்கு வருவேன். சம்பவ சமயத்தில் நான் முத்தாரம்மன் கோவில் முன்பு நின்று கொண்டிருந்தேன். சரியாக எந்த இடத்தில் நின்றிருந்தேன் என்றால் முத்தாரம்மன் கோவில் கேட் முன்பு குமாரபுரம் பெருஞ்சிலம்பு சாலையில் ஓரமாக நின்றிருந்தேன். களத்து வீடு செல்லும் கான்கீரீட் சாலைக்கு சற்று தள்ளி செல்ல வேண்டும். களத்துவீடு செல்லும் சாலைக்கு 5 அடி தூரத்தில் நின்றேன். எதிரி குமாரபுரம் திசையில் இருந்து வந்தார். எனக்கும் அவருக்கும்தான் முதலில்தான் வாக்குவாதம் ஏற்பட்டது. எத்தனை நேரம் என்னிடம் வாக்குவாதம் செய்தார் என்றால் ஒரு நிமிடத்திற்குள் வாக்குவாதம் முடிந்தது. சம்பவம் மொ்த்தமாக 5, 6 நிமிடத்திற்குள் முடிந்தது. வாக்குவாதத்தின்போது நானும் பிரதீஸ் மட்டும் அங்கு இருந்தோம். மணிகண்டன் அந்த சமயத்தில் எங்கு இருந்தார் என்றால் கோவிலுக்கு பின்னால் உள்ள அவரது வீட்டில் இருந்து எங்களை பார்க்க வந்து கொண்டிருந்தார். மணிகண்டனை சிறு வயதில் இருந்தே தெரியும். நாங்கள் நண்பர்கள். மணிகண்டனுக்கும் எதிரிக்கும் சண்டை நடக்கவில்லை. மணிகண்டன் எதிரியிடம் வழி கிடக்கில்லா அதில்

போகலாம் இல்ல அண்ணா என்று கேட்டார். எதிரியை கத்தியை வீசும்போது நாங்கள் தடுத்தோமா என்றால் இல்லை. இரண்டு நிமிடத்தில் அவர் வீசி முடித்துவிட்டார். நாங்கள் சின்ன பசங்க அவர் பெரியவர். நாங்கள் என்ன செய்ய முடியும். எத்தனை முறை வீசினார் என்றால் குறிப்பிட்டு தெரியவில்லை. சம்பவம் நடக்கும் போது நான் பிரதீஸ். மணிகண்டன் இருந்தோம். அஜித் மற்றும் ஜெயரவி அருகில் வந்து கொண்டிருந்தார்கள். மருத்துவமனைக்கு நானும் அஜித்தும் கொண்டு சென்றோம். வண்டியை அஜித் ஓட்டினார். மணிகண்டனுக்கு நிறைய இரத்தம் வந்தது. தறையில் களைந்ததா என்றால் ஆமாம். என் சட்டையில் இரத்தம் பட்டதா என்றால் இல்லை. தக்கலை அரசு மருத்துவமனையில் நானும் அஜித்தும் கொண்டு சேர்த்தோம். நான் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு செல்லவில்லை. அதன் பிறகு சம்பவம் குறித்து யாரிடமாவது தெரிவித்தேனா என்றால் அவர்கள் வழக்கு கொடுத்தார்கள். அது குறித்து மறுநாள் 28.10.2019 ம் தேதி போலீசார் விசாரித்தார்கள். சுமார் 11.00 மணி அளவில் விசாரித்தார்கள். சம்பவ இடத்திற்கு போலீசார் வந்திருந்தார்கள். அங்கு வைத்து விசாரித்தார்கள். இரத்தம் களைந்ததா என்று போலீசார் பார்த்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சம்பவ இடத்தை போலீசாருக்கு காட்டிக்கொடுத்தேனா என்றால் இல்லை. யார் காட்டிக்கொடுத்தார்கள் என்று தெரியாது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் மணிகண்டன் என் நண்பர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்து சம்பவ இடத்தை நேரடியாக பார்த்தேன். மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous Case No. C.C.83/2020

Preliminary Register P.W. 3

Sessions

| | |
|---|---|
| | Prosecution |
| Deposition of Witness for | Defence |
| | Court |

Name : Pratheesh

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2021.

**முதல் விசாரணை** -

நான் பெருஞ்சிலம்பில் வசிக்கிறேன். நாஞ்சில் பால் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 27.10.2019 ம் தேதி மதியம் 12.30 மணி அளவில் எதிரி வழி கேட்டார். மணிகண்டன் இவ்வளவு இடம் இருக்கில்லா போகலாமே என்று கேட்டார். எதிரி மணிகண்டனை கெட்டவார்த்தை பேசி கத்தியால் குத்திவிட்டார். அவரை மருத்துவமனைக்கு அவரது நண்பர்கள் அழைத்து சென்றார்கள். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடக்கும்போது நான் முத்தாரம்மன் கோவில் முன்பு நின்றிருந்தேன். என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் நான் மணிகண்டன், அஜித், கெசின், மற்றும் ஜெயரவி ஆகியோர் இருந்தனர். எதிரி குமாரபுரம் திசையில் இருந்து பைக்கில் இன்னொருவருடன் வந்தார். வண்டியில் உறாரன் அடித்துக் கொண்டிருந்தார். கெசின் இவ்வளவு இடம் இருக்கில்லா போக வேண்டியதுதானே என்று கேட்டார். எதற்கு ரோட்டில் வழிமறித்து நிற்கிறீர்கள் என்று கேட்டார். மணிகண்டன் அவரது வீட்டில் இருந்து வந்துகொண்டிருந்தார். அப்போது நாங்கள் இவ்வளவு இடம் இருக்கில்லா போக வேண்டியதுதானே என்று கேட்டோம். மணிகண்டனிடம் எதிரி நீ இந்த விசயத்தில் தலையிடாதே என்று சொன்னார். மணிகண்டன் திரும்பவும் இவ்வளவு இடம் இருக்கில்லா என்று கேட்டார். எதிரி மணிகண்டனை பார்த்து கெட்டவார்த்தை பேசினார். அவர் தேவையில்லாமல் பேசவேண்டாம் என்று சொன்னார். எதிரிக்கும் மணிகண்டனுக்கும் 5 நிமிடத்திற்குள் சண்டை நடந்து முடிந்தது. கத்தி எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சுமார் 1 1/2 அடி நீளம் இருக்கும். கத்தியின் அகலம் எவ்வளவு இருக்கும் என்றால் அகலம் சொல்ல தெரியவில்லை. ஒரு குத்து குத்தினார். அதன் பிறகு சம்பவம் குறித்து நான் யாரிடமும் சொல்லவில்லை. சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றும் மணிகண்டன் எனது நண்பர் என்பதால் அவருக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.